# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | I.A.No. 92 of 1996 in O.S.No. 81 of 1996 | **CNR No.** | : | TNKI13-000001-1972 |
| **Name** | : | ராம கவுண்டர் | **Father's Name** | : | மாரப்ப கவுண்டர் |
| **Witness for** | : | Petitioner | **Calling** | : | PW1 |
| **Age** | : | 70 | **Village** | : | ராமகவுண்டனூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 03.20 PM | **End Time** | : | 03:45 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 04.03.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

(1) இந்த மனுவை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அம்மா உயில் படி எனக்கு சொத்து பாத்தியம் என்றும் அதன்படி ஒதுக்க வேண்டும் என்றும் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லும் உயில் பதிவு செய்யப்பட்ட உயிலா என்றால் இல்லை. உயிலை ஏன் பதிவு செய்யவில்லை என்றால் உயிலை எழுதிய பிறகு எனது தாயார் உடல்நிலை சரியில்லாமல் ஆகிவிட்டார் நானும் உடல் நிலை சரியில்லாமல் இருந்தேன் அதனால் பதிவு செய்யப்படவில்லை. உயிலில் கண்ட சொத்துக்கள் எவ்வளவு என்றால் சுமார் 12 ஏக்கர் இருக்கும். உயிலில் கண்ட சொத்துக்கள் எனது அம்மாவிற்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களா என்றால் இல்லை, எனது அப்பாவின் மூலம் பாத்தியப்பட்டதாகும், மேலும் முதல்நிலை தீர்ப்பாணையின் படி பாத்தியப்பட்டதாகும்.

(2) நான் சொல்லும் முதல் நிலை தீர்ப்பாணையில் யார் யாருக்கு பாகம் உள்ளதாக தீர்ப்பானது என்றால் எனது அம்மா சாமாத்தம்மாள் 1/4, எனது தங்கை ராமாக்களுக்கு 1/4, எனக்கு 1/4, கண்ணுகவுண்டருக்கு 1/4 பங்கும் தீர்ப்பானது. எனக்கு ஒதுக்கப்பட்ட 1/4 பங்கு அளவை செய்து பிரித்து ஒதுக்கப்பட்டதா என்றால் இல்லை. எனது அம்மாவின் 1/4 பங்கு எந்த சொத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு எழுதியுள்ளாரா என்றால் வழக்கு 1 மற்றும் 2 அட்டவணை சொத்துக்களில் 1/4 பங்கு முதல்நிலை தீர்ப்பாணையின் படி எழுதியுள்ளார் ஆனால் முதல் நிலை தீர்ப்பாணையின் படி இன்னும் சொத்துக்கள் பிரிக்கப்படவில்லை.

(3) முதல்நிலை தீர்ப்பாணை எப்போது பிறப்பிக்கப்பட்டது என்றால் தேதி தெரியாது. முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதில் இருந்து எவ்வளவு நாட்கள் கழித்து எனக்கு எழுதி வைத்தார்கள் என்றால் 03.03.1987 ல் எனக்கு உயில் எழுதி வைத்தார். எனது அம்மாவிற்கு இந்த சொத்தில் இந்த பாகம் என்று பாக பிரிவினை செய்த பிறகு தான் உயில் எழுத முடியும் என்றும் நானாக இந்த உயிலை மோசடியாக தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு ஒதுக்கப்பட்ட ¼ பங்கு பொறுத்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கபடாததால் எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்ட ¼ பங்கில் அவரது வாரிசுகள் அனைவருக்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

(4) உயில் எங்கு எழுதினார்கள் என்றால் எனது வீட்டில் எழுதினார்கள். உயில் எழுதும் போது நான் வீட்டில் இருந்தேனா என்றால் நான் உடன் இல்லை மாடு மேய்த்து கொண்டிருந்தேன். எனது அம்மா உயில் தான் எழுதுகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனது அம்மா சொல்லி தான்

தெரியும். உயில் எழுதும் போது யார் உடன் இருந்தார்கள் என்றால் நாகராஜ், மேகநாதன், ராமசந்திரன், ராமக்காள் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்ததாக எனது மச்சான் மேகநாதன் தான் என்னிடம் சொன்னார். எனது மச்சான் எந்த தேதியில் எனக்கு உயில் எழுதி இருப்பதாகவும் அவர்கள் உடன் இருந்ததாகவும் சொன்னார் என்றால் 04.03.1987 ஆம் தேதி மதியம் எனது மச்சான் மேகநாதன் தான் என்னிடம் உயில் எழுதியதாக விவரம் தெரிவித்து உயிலை கொடுத்தார்.

(5) உயில் குறித்து விளம்புகை பரிகாரம் கேட்டு வேறு எதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அரூர் நீதிமன்றத்தில் மின் இணைப்பு தரக்கூடாது என்று பரிகாரம் கேட்டிருந்த வழக்கில் தாக்கல் செய்திருந்தேன். நான் சொல்லும் வழக்கு என்ன ஆனது என்றால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது, நானும் ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தேன் அது தள்ளுபடி ஆகிவிட்டது. **அசல் வழக்கு எண்.124/2002** தள்ளுபடி ஆன விவரத்தை ஏன் சொல்லவில்லை என்றால் இந்த வழக்கு நிலுவையில் உள்ளதால் அதை பற்றி சொல்லவில்லை. அந்த வழக்கிலும் எனது அம்மா எனக்கு உயில் எழுதி தரவில்லை என்று தள்ளுபடி ஆகிவிட்டது என்றும் அதனால் தான் அந்த தீர்ப்பை இதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, மின் இணைப்பு பற்றி மட்டும் தான் தீர்ப்பாணது, உயில் குறித்து எதுவும் இல்லை.

(6) 9ம் எதிர்மனுதாரர் சக்திவேலுக்கு ஆதரவாக உயில் இருப்பதாக சொல்லும் நிலையில் அதை பற்றி எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் நான் இறுதி நிலை தீர்ப்பாணை கோரி மனு தாக்கல் செய்து 7–8 ஆண்டுகளுக்கு பிறகு போலியான உயில் தயாரித்து மனு தாக்கல் செய்தார்

அப்போது தான் தெரியும். அவர் தாக்கல் செய்த உயில் செல்லதக்கதல்ல என்று தனியாக நான் ஏதாவது வழக்கோ நடவடிக்கையோ எடுத்தேனா என்றால் இல்லை, இந்த வழக்கிலே தான் வழக்காடி வருகிறேன். உயிலில் கண்ட உயிருடன் உள்ள இரண்டு சாட்கிளையும் நான் ஏன் விசாரிக்கவில்லை என்றால் அவர்கள் எனக்கு எதிர்ப்பாக சாட்சியம் அளிப்போம் என்று என்னிடம் சொன்னதால் அவர்களை இன்னும் விசாரிக்கவில்லை. உண்மை சங்கதிகளை சொல்லிவிடுவார்கள் என்பதனால் அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த உயிலை யார் எழுதினார்கள் என்றால் பாய் எழுதினார் அவர் பெயர் சரியாக ஞுபாகம் இல்லை. சாட்சி தற்போது நவாப்ஜான் என்று சாட்சியம் அளிக்கிறார். அவரை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் அவரையும் கட்டுப்படுத்திவிட்டார்கள் அதனால் விசாரிக்கவில்லை. நவாப்ஜான் இன்றைய தேதிலும் சாட்சியம் அளிக்க தயாராக உள்ளார் என்றும் அவரை விசாரித்தால் உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதால் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, அவர் உண்மை சங்கதிகளை சாட்சியம் அளிக்க மாட்டேன் என்றும் எனக்கு எதிராக சாட்சியம் அளிப்பேன் என்றும் சொல்லியதால் விசாரிக்கவில்லை.

(7) உயிலை நல்ல மனநிலையில் எனது அம்மா எழுதவில்லை என்றும் அவ்வாறு எழுதியிருந்தால் ஏதாவது ஒரு சாட்சியாவது எனக்கு ஆதரவாக சாட்சியம் அளித்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மாவின் ¼ பாகத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக மோசடியாக உயில் தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அம்மாவின் ¼ பாகத்தில் எனது அம்மாவின் வாரிசுகள் அனைவருக்கும் பாகம் உள்ளது

அதனை அபகரிக்க வேண்டும் என்று மோசடியாக உயில் தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உயில் மோசடியான உயில் என்றும் 10 முதல் 12 எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த உயில் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றும் எனது அம்மாவின் பங்கை அபகரிக்க வேண்டும் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மாவின் 1/4 பாகத்தை பொறுத்து இந்த மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(8) <u>குறுக்கு விசாரணை முடிவுற்றது.</u>

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai